REGISTERED AT T[illegible] G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னுகம், நந்தன சித்திரை கடு 27-4-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 40

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ தமிழ் மக்கள் உண்மை நிலையை உணர்ந்து நன்மை வழியைக் கடைப்பிடித்துத் தமிழினத்தின் பெருமையை நிலைநாட்ட முற்பட வேண்டும்.

# மானத் தமிழினம் மதி மயங்காது!

## பிளவு விரும்பும் அபேட்சகர்கள் தில்லுமுல்லு



இந்தோனேஷியாவில் இலங்கை ஸ்தானிகராகப் பதவி வகித்த திரு. ஸி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்கள் அப்பதவியினின்று விலகி யூ. என். பி. அபேட்சகராக அகலவத்தையிற் போட்டியிடுகின்றார்.

எந்தக் கட்சிக்கு இம்முறை வாக்களிக்கவேண்டுமென்பதைப் பற்றியே ஒவ்வொருவரும் இன்று சிந்தித்து வருகின்றனர். வீதியிலே செல்பவர்களும் வீட்டிலே இருப்பவர்களும் தோட்டத்திலே உழைப்பவர்களும் இப்போது நாட்டுக்கு உகந்த அரசியல் யாதென்பதைப் பற்றியே சிந்திக்கின்றனர். வகுப்புவாத அரசியலாற் கண்ட பயன் ஒன்றுமில்லையென்பதை இன்று தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துவிட்டனர். ஆகவேதான் தமிழரசுக் கட்சியால் நாட்டில் பிளவு ஏற்படுவதை எவரும் விரும்புவதாயில்லை.

சமீபத்தில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற அரசியற் கூட்டமொன்றில் கையிலும் உழைத்த பணத்தைக்கொண்டு கட்டி எழுப்பப்பட்டன. செல்வ வளம் மிகுந்த தென்னிலங்கையுடன் யாழ்ப்பாணம் எவ்வித தொடர்புமில்லாமற் துண்டாடப்பட வேண்டுமெனத் திரு. செல்வநாயகம் உங்களுக்கு உபதேசிக்கின்றார். அன்பர்களே! நாங்கள் புத்தி தடுமாறித்தானும் பிழையான ஒரு காரியத்தை ஒருபோதும் செய்யக்கூடாது. ஏறத்தாழ 5000 வருடகாலம் தமிழர் இலங்கை முழுவதிலும் உரிமை பூண்டு வாழ்கின்றனர். பண்டைக்காலத்திலே தமிழ் மன்னர்களே அதிகமான காலம் இலங்கையை அரசு புரிந்தனர் என இலங்கைச் சரித்திர விற்பன்னர் கூறுகின்றனர். ஆகவே இந்தச் சந்ததியிலுள்ள சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தங்கள் உரிமைகளை இழக்காமல் ஒற்றுமைபூண்டு வாழ முயலவேண்டும்......"

### உரிமையும் ஒற்றுமையும்

பொதுவாக இலங்கை மக்கள் அனைவரும் தமது உரிமைகளைப் பெற்று ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதை விரும்புபவர்கள், திரு. ஸி. சுந்தரலிங்கம் அவர்களின் அறிவுரையைத் தட்டிக் கழிக்கவே மாட்டார்கள். ஆனல் மர்மமான தமிழரசுக் கட்சியினரோ அடுக்குத் தொடரிலும் எதுகை மோனையிலும் ஏதோவெல்லாம் எழுதித் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர். தமிழர்களைத் தட்டி எழுப்புவதாகக்கூறிக்கொண்டு அவர்கள் இப்போது சில காலமாக எழுதி வெளியிடும் துண்டுப் பிரசுரங்களிற் பின்வரும் வாக்கியங்கள் மிரள மிரள விழிப்பது வழக்கமாகிக்கொண்டது: "ஈழத்துத் தமிழினம் மீளா அடிமைகளா?; நமது நாட்டில் நம்மை நாமே ஆளமுடியுமா?; நம் அடிமை வாழ்வுக்கு எப்போது முடிவு காண்போம்?; மானத் தமிழினம் மதி மயங்கி விட்டதா?". தமிழரசுக் கட்சியின் இந்த மாய்மால வார்த்தைகளை வாசிக்கும்போது சந்தை தெருக்களில் நின்று சில போலி வைத்தியர்கள் தங்கள் தலைவலி ஔடதங்களை விற்பனை செய்வதற்குக் கையாளும் வேடிக்கை வார்த்தைகளே நினைவுக்கு வருகின்றன.

### வெறுங் கூக்குரல்

ஆரம்பத்தில் இந்தியாவுடன் இலங்கையை இணைத்துக் கூட்டாட்சி (சமஷ்டி) அமைத்து ஈழத் தமிழினத்தை அடிமைத்தனத்தினின்றும் நீக்குவதெனக் கூக்குரலிட்ட செல்வநாயகம் கோஷ்டியினர் இப்போது இலங்கையிலே தமிழரசு ஏற்படுத்தித் தமிழ்ப் பிரதம மந்திரி ஒருவரையும் நியமிக்க முன்வந்திருப்பது

**நமது அரசியல் நிருபர்**

அப் பழுக்கற்ற அரசியல் மோசடியன்றி வேறொன்றுமில்லை. ஆகவேதான் 'தமிழரசு' என்ற சொற்றொடரே மிக விசித்திரமானதெனச் சென்ற வாரம் இங்கு குறிப்பிட்டிருந்தேன். இதனை ஆங்கிலத்திற் சமஷ்டிக் கட்சி (கூட்டாட்சி) என்று தமிழரசுக் கட்சியினர் கூறுகின்றனர். தென்னிந்தியாவிலுள்ளவர்களையும் யாழ்ப்பாணத்தில் எழுந்துள்ள தமிழரசு என்ற சொற்றொடர் தடுமாற்றமடையச் செய்து வருகின்றது. திரு. செல்வநாயகம் அவர்களின் **பாகிஸ்தான் கொள்கை** தமிழரசு என்ற போர்வைக்குள் மறைந்து நிற்பதால் தமிழ் நாட்டிலுள்ளவர்களில் ஒரு சிலர் இலங்கைத் தமிழரிற் சிலர் 'தமிழரசு' கோரி நிற்பதில் ஏதோ நியாயம் இருக்கின்றதெனப் பிழையாக எண்ணிவிடுகின்றனர். திரு. சிவஞான கிராமணியார் போன்ற தமிழ் நாட்டுத் தலைவர்கள் விஷயங்களை நன்கு அறிந்தபின்னர் இலங்கையிலுள்ள தமிழர்கள் பிளவுண்டிருக்க விரும்புவது புத்திசாதுரியமாகாதென நம்புகின்றனர். இதை அறிந்த பின்னரும் சென்னையிலுள்ள ஒரு சில அரசியல் வாதிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

இது தேர்தல் காலம்
பிரசாரம் அவசியம்

சுன்னுகம்:
**திருமகள் அழுத்தகம்**

அபேட்சகர்களின் உதவிக்கு முன்வந்துள்ளது.

தேர்தல் சம்பந்தமான சகல அச்சுவேலைகளும் செய்துகொடுக்கப்படும்

தந்தி: 'Bodhini' பேசுந்தந்தி: 805

திரு. ஸி. சுந்தரலிங்கம் அவர்கள் பேசும்போது, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கோஷ்டியினரால் தமிழர்களுக்கு மிகுந்த ஆபத்து ஏற்பட்டு வருகின்றதென்பதை விளக்கி வைத்ததுடன் நாட்டைத் துண்டாடுவது தமிழ்ச் சாகியத்தாருக்கு மண்போடும் காரியமெனவும் எச்சரிக்கை செய்தன்னார். திரு. சுந்தரலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணக் கூட்டத்திற் பேசியதாவது: யாழ்ப்பாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் வெட்டிப் பிரித்த பின்னர் மர்மமான சமஷ்டிமூலம் ஒன்று சேர்க்க வேண்டுமெனத் திரு. செல்வநாயகம் கூறுகின்றார். ......எனது அருமைச் சகோதரர்களே! தெரிவு தினத்தன்று உங்கள் வாக்குரிமைகளை அளிக்கும்போது உங்கள் பிள்ளைகள் வாயிலும், பேரப்பிள்ளைகள் வாயிலும் மண்ணை அள்ளிப் போடவேண்டாம். எங்கள் யாழ்ப்பாணத்திலே கல்விநிலையங்கள் பல இருக்கின்றன. இவை யாவும் மலாயாவிலும், தென்னிலங்

# கிழக்கு மாகாணத்தில் தேர்தல்
## ஆரவாரமும் மப்பு மந்தாரமுமான நிலைமை

பிரதிநிதிகள் சபைத் தேர்தலிற் கிழக்கு மாகாணத் தொகுதிகளுக்கு யார் அபேட்சகர்களாக நிற்கப்போகின்றார்களென்பது தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை. "திரு...... அவர்கள் வந்தால் நல்லது; திரு. ... அவர்களுக்கு இம்முறை நல்லபாடம் படிப்பித்துவைக்கவேண்டும்" என்ற பேச்சுக்களே பலவிடங்களிலும் அடிபடுகின்றன. மட்டக்களப்புத் தொகுதிக்குச் சென்ற தேர்தலில் நான்கு தமிழர்கள் போட்டியிட்டதால் ஜனுப் சின்னலெப்பை இலேசாக வெற்றிபெறமுடிந்ததென்பதைத் தமிழர்கள் உணர்ந்துவிட்டபடியாலோ என்னவோ, இம்முறை சென்ற தேர்தலிற் போட்டியிட்டவர்கள் கூடத் திரு. கதிராமரை ஆதரிக்கமுன்வந்துள்ளனர்போலும்.

ஜனுப் சின்னலெப்பை யூ. என். பி. கட்சியைச் சேர்ந்தவர். இவர் வெற்றிபெறுவதையே இக்கட்சியினர் இம்முறையும் விரும்புவதால் ஓரளவு செல்வாக்குள்ள மற்றுமோர் தமிழ்ப் பிரமுகரை மட்டக்க

**நமது நிருபர்**

ளப்புத்தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்த யூ. என். பி. கட்சியினர் ஆலோசிக்கின்றனர் என்ற செய்தியும் கொஞ்சம் பெரிய இடத்திலிருந்து கிளம்பியிருக்கின்றது. மட்டக்களப்புத் தொகுதிகளிற் கட்சிப்பலத்தை மட்டுங்கொண்டு வெற்றிபெற முடியாதென்பது உண்மை. இதை உததேசித்துப்போலும் எந்த அரசியற்கட்சியினராவது பகிரங்கமாகப் பிரசாரஞ்செய்ய இன்னும் ஆரம்பிக்கவில்லை. தமிழரசுக்கட்சியைச்சேர்ந்த இருவர் மட்டக்களப்பு, கற்குடா, பட்டிருப்பு, பொத்துவில் தொகுதிகளுக்கு மாறி மாறி ஓடித் திரிகின்றனர். திருகோணமலையைத் தவிரத் தமிழரசுக்கட்சிக்குக் கிழக்கு மாகாணத்தில் ஆதரவு கிடையாது.

மட்டக்களப்புத் தொகுதிக்குப் பின்வருவோர் போட்டியிடுவார்களெனத் தெரிகிறது: ஜனுப் எஸ். சின்னலெப்பை (யூ. என். பி.), திரு. எஸ். தவராஜா (சுயேச்சை), திரு. ஆர். பி. கதிராமர் (சுயேச்சை), திரு. ரீ. எம். துரைராஜா (குடியரசுக்கட்சி).

திரு. வி. நல்லையா அவர்கள் கற்குடாத் தொகுதிக்கு யூ. என். பி. அபேட்சகராக இம்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

**தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்**

(நச்சினார்க்கினியம்)

இரண்டாம் பதிப்பு

மகாவித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதிய உரை விளக்கக் குறிப்புக்களுடனும், அவர்கள் திருத்திய சில புதிய திருத்தங்களுடனும்

வெளிவந்துவிட்டது

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம், இலங்கை

# யாழ்ப்பாணம் இசை விழா

## இரசிக இரஞ்சனசபை நன்முயற்சி

யாழ்ப்பாணம் என்ற பெயரே இசையுடன் தொடர்புற்றிருக்கின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த யாழ்ப்பாணத்தில் இசை விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமானது. இதுபோன்ற விழாக்கள் இசைக் கலைஞர்களுக்கும் இரசிகர்களுக்கும் மிக அவசியமானவையெனப் பரமேசுவரக் கல்லூரி அதிபர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் முன்றிலில் நடைபெற்ற இசை விழாவைத் திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டிருந்தார். திரு. ரீ. சீனிவாசகம் அவர்கள் தலைமை வகித்தார்கள். இவ்விழா 19, 20, 21-4-52 திகதிகளில் நடைபெற்றது. அடுத்த இரு தினங்களிலும் விழாவை முறையே யாழ்ப்பாணம் மேயர் திரு. சாம் சபாபதி அவர்களும், திரு. க கனகரத்தினம் அவர்களும் திறந்துவைத்தனர்.

இசைவிழாப் பந்தரில் பிரதி தினமும் மாலை 4 மணி தொடக்கம் இரவு 12 மணி வரை இசைக் கச்சேரிகளும் கதாப் பிரசங்கங்களும் விரிவுரைகளும் நடைபெற்றன. நாதசுவரக் கோஷ்டியினரின் கச்சேரி சபையோருக்கு அரிய விருந்தாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள இசைக் கலைஞர்கள் ஒன்றுகூடித் தங்கள் திறமையைக் காட்டுவதற்கு இந்த இசை விழா ஒரு பொது மேடையாக அமைந்ததுமன்றி இவ் வைபவம் கலைஞர்கள் சிலரின் திறமையை அறிந்து கொள்வதற்கு ஓர் உரைகல்லாகவும் விளங்கிற்று. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை அளித்ததற்காக யாழ்ப்பாணம் இரசிக இரஞ்சன சபையினரைப் பாராட்ட வேண்டியது அவசியமாகும். இவ்விழாவில் இசைக் கலைஞர்களான பிரம்மஸ்ரீ ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர், திரு. கே. வி. தம்பு, சங்கீதபூஷணம் ரீ. இராசலிங்கம், திருமதி சரஸ்வதி பாக்கியராசா, திரு. வி. செல்லத்துரை, திரு. எஸ். அரியநாயகம், திரு. பரம் தில்லைராஜன், திரு. எம். எஸ். நாராயணன், செல்வி எம். ஏ. சந்திரா, இசைமணி வி. நடேசன், சங்கீதபூஷணம் ஆர். நடராஜன், திரு. எஸ். எஸ். இரத்தினம்பிள்ளை ஆகியவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றினர். திரு. பரம் தில்லைராஜன், திரு. எஸ். எஸ். இரத்தினம்பிள்ளை, சங்கீதபூஷணம் ஆர். நடராஜன், செல்வி எம். ஏ. சந்திரா ஆகியவர்களின் இசைக்கச்சேரிகள் இரசிகர்களைப் பெரிதுங் கவர்ந்துவிட்டன. ஏனைய கலைஞர்களும் சபையோரை மகிழ்வித்தனர். இரசிகர்களிடையே இக் கலைஞர்களுக்கு எத்தகைய அபிமானம் இருக்கின்றதென்பதை இவ் விசைவிழா உணர்த்தி வைத்துள்ளதென்றே கூறவேண்டும்.

—இரசிகன்

## சல்லி அம்மன் கோயில் பலி நிறுத்தம்

சென்ற 18-4-52 வெள்ளிக் கிழமை பிற்பகல் திருகோணமலைக்கு வடக்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள சல்லி யென்னும் கிராமத்தில் உள்ள அம்மன் கோயிலடியில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக் கோவிலிலே அநேக வருடகாலமாக ஆடுகளும் கோழிகளும் வைகாசி மாதத்தில் நடைபெறும் விழாவிற் பலியிடப்படுவது வழக்கம். இதனை நிறுத்துவதற்காகத் திருகோணமலை காந்தி சேவா சங்கத்தாரும் ஏனைய சைவமக்களும் முயற்சி செய்து வந்தனர். அம் முயற்சி இப்போது பலன் தர ஆரம்பித்திருக்கிறது. அன்று நடந்த கூட்டத்துக்கு அம்மன் கோயில் தர்மகர்த்தாக்களுள் ஒருவாகிய திரு. வே. இராமலிங்கம் அவர்கள் தலைமை தாங்கிப் பலி நிறுத்தம் விஷயத்தையிட்டு ஆலோசித்தனர். முற்போக்குள்ள பெரியோர்கள் பலரும் பலி நிறுத்தம் செய்ய வேண்டுமென்று பல ஆதாரங்கள் காட்டிப் பேசினர். கடைசியாக இவ்வாண்டோடு வைகாசியில் நடக்கவிருக்கும விழாவில் பலி நிறுத்தம் செய்துவிட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானித்தனர். இக் கூட்டத்திற் பங்குபற்றிப் பேசிய காந்தி சேவா சங்கக் காரியதரிசி திரு. கோ. இராஜகோபால் அவர்கள இந் நன் முயற்சிக்கு ஆதரவளித்த சல்லிக்கிராம மக்களை வாழ்த்தி இம் முன்மாதிரியைப் பலி கொடுக்கும் ஏனைய இடங்களிலும் பின்பற்றிப் பலி நிறுத்தம்செய்யச் சைவ மக்கள் யாவரும் முயற்சி செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார்.

—நிருபர்.

## மாகியம்பதி தமிழ்ச் சங்கம்

சென்ற 20-4.52 ஞாயிற்றுக் கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி இசை ஆசிரியர் திரு. பி. நடராஜபிள்ளை அவர்கள் தலைமையில் மாகியம்பதி தமிழ்ச் சங்கம் அமைக்கப்பெற்றது

திரு. பொ. சுப்பையாபிள்ளை அவர்கள் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். பின்வருவோர் சங்க உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வே. செல்லையா, உப தலைவர்கள்: திரு. பொ. சுப்பையாபிள்ளை, திரு. செ. நாகரத்தினம். தனாதிகாரி: திரு. சி. சிதம்பரப்பிள்ளை. காரியதரிசி: திரு. த. சொக்கலிங்கம். உப காரியதரிசிகள்: திரு. சி. கனகசபாபதி, திரு. பொ. சோதிவேல். மற்றும் 16 அங்கத்தவர்களைக்கொண்ட நிருவாகசபையும் அமைக்கப்பெற்றது.

## குப்பிழான் சனசமூக சங்கம் ஆண்டு விழா

சென்ற (12-4-52) சனிக் கிழமை மாலை 4 மணி தொடக்கம் விக்னேசுவர வாசிகசாலை மண்டபத்தில் திருவாளர் கோ. வயித்திலிங்கம் அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. திரு. இராஜசேகரன் எம். ஏ. அவர்களும் திரு. பண்டிதர் கே. கயிலாயம் அவர்களும் முறையே விஞ்ஞானமும் வாழ்க்கையும், திருவள்ளுவர் என்னும் பொருள்கள் பற்றிப் பேசினர். புதுவருட உத்தியோகத்தர் தெரிவுடன் விழா நிறைவேறியது.


புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

சகல பயிர்களுக்கு C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள் C C C கலவைப் பசளைகளை தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The Colombo Commercial Company, LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4567]

★ நமது யாழ்ப்பாணத்துப் பட்டினத்தில் உலாந்தாக்காரர் கோட்டை கட்டி இயற்கை நீரரணாகிய கடலோடு சம்பந்தப்படச் செயற்கை அகழி அமைத்தனர்.

# நம்நாட்டு அரண்வகுப்பு

## தமிழ்ப் பெருமன்னர்களின் பாதுகாப்பு

தமிழ்ப்புலவர்
வ. மு. இரத்தினேசுவரஐயர்

குன்றும், காடும், நீரும். நிலனும் உலகிடை நிறைந்திருக்கின்றன. நாடு என்ற பகுதிக்கு அரண் அவசியம் வேண்டும். நாட்டின் புற எல்லையைச் சூழ்ந்து காவல் இருத்தல் புதுமுறையன்று. அரண், போர் நேருங் காலத்திலே சீருஞ் சிறப்பும் படைத்து அந்நாட்டைக் காக்கும். பண்டிதமணி மஹாமஹோபாத்யாய கதிரேசச்செட்டியாரவர்கள் சுக்கிரநீதியைச் சுத்த செந்தமிழில் நமக்குப் பெருவிருந்தாக அளித்தார்கள். அந்நீதிக் களஞ்சியத்துள்ள சில மணிகள் வருமாறு:

பிறர் உட்புக இயலாதவாறு பள்ளமும் முள்ளும் கல்லும் ஆகிய இவற்றுடைய நிலவரண் நாற்புறமும் மிகச் சிறப்பமையத் தோண்டி யமைக்கப்படுவது அகழியரணாகும். இப்படிக் கைகளாலும் கற்களாலும் எடுக்கப்பட்ட சுவர்களாலாகிய கோட்டை மதிலரணாகும். பெரும் முள் மரங்கள நாற்புறமுஞ் சூழ அமைக்கப்படுவது காட்டரணாகும். நீரும் நிழலுமின்றி நான்கு பக்கத்துமுள்ள மருநிலம் நிலவரணாகும். நாற்புறத்தும் மிக்க நீர்ச் செறிவுடையது நீரரணாகும். மக்கள் நடமாடாத இடத்தில் நல்ல நீரைப் பின்புறத்தே கொண்டு மிக்க உயரமுடைத்தாக இருப்பது மலையரணாகும். அகழரணும், களர்நிலவரணும், மதிலரணும், காட்டரணும், மருநிலவரணும், நீரரணும், மலையரணும் என்ற எழுவகை யரண்களும் நாட்டுக்கு ஒன்றற்கொன்று இன்றியமையாக் காவலாந்தன்மை புலப்படும். (அத். 4, அதிகாரம் 6, மனு கூறுவது) ஜலதுர்க்கம், ஸ்தல துர்க்கம், பர்வத துர்க்கம், வன துர்க்கம் என்ற நான்கேயாம். திருவள்ளுவனார் நன்கு ஆராய்ந்து தமிழகப் பண்பாட்டைச் செவ்விது காட்டினார். அது:

"மணிநீரும் மண்ணும்
மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்"

என்பதாம்.

இத் திருக்குறளில் நான்கு உம்மைகளை அடுக்கிப் புணர்ந்தமையால் வள்ளுவனாருக்கு நான்கு அரண் உடன்பாடு என்பது அறியலாம். பரிப்பெருமாள் என்ற உரையாசிரியர் மலை, காடு என்ற இரண்டனையே காட்டுவர். சுக்கிரநீதியில் "நல்நீரைப் பின்புறத்தேகொண்ட மலையரண் என்றுரைக்கப்பட்டது. பரிமேலழகர் நீர் அரண், நில அரண், மலை அரண், காட்டரண் என்ற நான்கையே விளக்கினர். மணக்குடவர், பரிதியார், காலிங்கர் என்பவர்களுரைகளும் நான்கு அரண்களுள என்பதே. பரிமேலழகர் நீர்பெருநீர், கலங்காதது, எஞ்ஞான்றும் வற்றாதது என்று விவரந்தருவர். ஒவ்வோர் அரணும் இயற்கையும் செயற்கையுமா யிருக்கலாம். ஆறு, கடல் இயற்கை நீர். அகழி செயற்கைநீர். மதுரைமாநகருக்கு ஒருபுறம் வைகை நீரரணாக அமைந்தமையும், பூம்புகாருக்குக் கடல் நீரரணாக அமைந்தமையும் நோக்கி உண்மை காணலாம்.

நமது யாழ்ப்பாணத்துப் பட்டினத்தில் உலாந்தாக்காரர் கோட்டை கட்டி இயற்கை நீரரணாகிய கடலோடு சம்பந்தப்படச் செயற்கை அகழி அமைத்தனர். அதனை இன்றும் பார்க்கலாம். பத்மினி அரசியார் மதிலரண் போர்க் கருவிகளோடு அரிய பொறிகளும் வைத்துச் சமைப்பித்தனர். காஞ்சியம்பதி வருணனையில் கச்சியப்பர் கூறும் மதிலில் அமைந்த கருவிகளை அறிந்து அந்நாளிலுள்ள பாதுகாப்பின் பண்பு நன்கு உணரலாம்.

"கொளற்கரிதாய்க் கொண்ட
கூழ்த்தாகி
அகழ்நிலக்கு எளிதாம்
நீரதுஅரண்"

என்றார் பிறரும். திருகோணசலத்தில் நீரும் மலையும் நிலைத்த அரணுவது பேராசிரியர்களின் கருத்தை நிலைநாட்டும்.

"மணிநீர் வைப்பும்
மதிலொடு பெயரிளப்
பனிநீர்ப் படுவில் பட்டினம்"

என்ற சிறுபாணாற்றுப் படை புகலும். பொதுவகையாகத் தமிழ்ப் பெருமன்னர்களும், அரசர்களும், ராஜபுத்திர அரசர்களும் கையாண்ட அரண்வகைகளைப் பல்லாண்டுகளுக்கு முன் நமது செந்நாப்போதார் செப்பியமை கண்டு தமிழர் பெருமிதமடைதல் சாலும்.

# புதுவருட நினைவு *

— சாரதா —

மகாத்மாவின் மரணத்தால் மனிதர்க் குள்ளே
மகத்தான மனமாற்றம் வந்த தென்று
சகாக்கள்பலர் உரைக்கின்றார்—எதிர்பார்க் கின்றார்
சங்கதியை நாம்நம்பத் தயாரா யில்லை.
மகாத்மாவின் மரணத்தால் உண்மை யான
மனமலர்ச்சி வந்ததெனில், மனச்சாட் சிக்கும்
தகாதநெறி முறைமாறத் தருமம் வாழச்
சத்தியமன்(பு) அஹிம்சையெலாந் தழைக்குமன்றோ?

மனச்சாட்சி என்பதுதான் மதத்தின் பண்பு
மறந்தவர்கள் தான்தமது மதத்தின் பேராற்
கணக்கற்ற தீமைகளைச் செய்து வாழும்
கயவரென அனுபவத்திற் காணு கின்றோம்;
பணவாஞ்சை, மனிதனது மனத்தைப் பற்றிப்
பண்ணுகிற சேஷ்டைகளைப் பார்க்கும் போது
இணக்கமில்லா மதக்கணக்குப் பேசிக் கொண்டு
இருப்பதெல்லாம்வீணென்றேஎண்ணத்தோன்றும்.

எம்மதமுங் கொலைகளவு முதலா யுள்ள
இழிந்தசெயல் களைச்செய்ய ஏவ வில்லை;
எம்மதமும் அன்(பு)அஹிம்சை வழியில் நின்று
இறைவனைத்தேடென் றியம்பும் இதுதான் உண்மை
எம்மவர்கள் தெய்வத்தின் பேரைச் சாட்டி
ஏதேதோ வெறியாட்டு வேள்வி யென்று
'அம்மம்மா!' என்றலற ஆடு கோழி
அறுப்பதெல்லாம் நீதிக்கே அடுக்கா தம்மா!

புதுவருடம் பிறக்கிறது ஊரில் எல்லாம்
பொங்கல்பலி தொடங்கிவிடும்; போதா தென்று
மதுவெறியுங் கலந்துவரும் சண்டை போட்டு
மண்டையுடை வதும்நடக்கும் கொலையும் ஆகும்;
புதுமையடா புதுமை! இது போன்ற மூடப்
போக்குகளை நீக்குதற்குப் புனித நாளிற்
புதுவருட நினைவாயோர் சபதம் பூண்போம்
பொன்னான காந்தியமும் போற்றி வாழ்வோம்!

* 13-4-52-ல் கொழும்பு வானொலி ஏற்படுத்திய புத்தாண்டுக் கவியரங்க நிகழ்ச்சியின் ஒருபகுதி.

# மலாயாவிற் பிறந்த இலங்கைத் தமிழர்

## பிரஜாவுரிமை பெறுவதிற் கஷ்டம்

இலங்கைத் தமிழன்

இலங்கைத் தமிழர் நேற்றின்று இலங்கைக்கு வந்தவரல்லர். சரித்திரத்திற்கு முற்பட்ட காலந் தொடக்கம் இலங்கையில் வாழ்பவர். இவர்களிற் பெரும்பான்மையோர் வட இலங்கையைத் தமது சொந்த ஊராகக் கொண்டவர்கள்.

பொருளீட்டுவதற்காக உத்தியோகங்களையும் வேறு தொழில்களையும் நாடி இவர்கள் சென்ற ஐம்பது வருடங்களாக மலாயா நாட்டுடன் தொடர்புடையவர்களாக இருப்பது யாவரும் அறிந்த விஷயம். மலாயாவிற் பிறந்து பின் தமது சொந்த நாடாகும் இலங்கைக்குத் திரும்பிய இத் தமிழர்கள் இலங்கையின் பிரஜாவுரிமையைப் பெற அடையும் சிரமமும் கஷ்டமும் இம்மட்டன்று. இலங்கை யரசினர் புதிதாக வியற்றிய பிரஜாவுரிமைச் சட்டம் இலங்கையைத் தமது சொந்த நாடாகவுடைய இலங்கைத் தமிழர்க்கு மிகப் பாதகமாக அமைந்துவிட்டது.

இலங்கையரசினர் தம் நாட்டின் நன்மையை நாடிப் பிரஜாவுரிமைச் சட்டமொன்று சுதந்திரம் பெற்றவுடன் இயற்ற முன்வந்தது பொருத்தமுடையதே. ஆனால் இலங்கையில் பிரஜாவுரிமையை நாடும் இந்தியர் முதலிய வேற்று நாட்டினரை இலக்காகக் கொண்டு எழுந்த இச்சட்டம், இலங்கையைச் சொந்தநாடாகவுடைய இலங்கைத் தமிழ் மக்களையும் பாதிக்கும் என்று எவரும் நினைத்ததேயில்லை. மலாயாவிற் பிறந்த தமிழ் இளைஞர்கள் தமது பிரஜாவுரிமையைப் பதிவுசெய்துகொண்டாற்றான் அவர்கள் மற்றைய இலங்கை மக்கள்போல் உயர்ந்த உத்தியோகங்கள், பதவிகள் என்பனவற்றை ஒப்பப் பெறலாம். மலாயாவினின்று திரும்பிய நூற்றுக்கணக்கான இத்தமிழ் இளைஞர்கள் தமது பிரஜாவுரிமையைப் பதிவு செய்து கொள்ளும் விஷயத்தில் அடையும் சிரமங்களும் கட்டுப்பாடுகளும் இடமாததிரமல்ல.

இந்தப் பிறப்புரிமையைப் பெற விரும்பும இளைஞர்களை நோக்கி எழுங் கேள்விகள் எத்தனை? அவர்கள் அத்தாட்சிப்படுத்தவேண்டிய உண்மைகள் எத்தனை? தாய் தந்தையரின் பிறப்புப் பத்திரம் வேண்டும்; அவர்களின் கலியாணப் பத்திரம் வேண்டும். இம்மட்டுமா? தாய் தந்தையர்களின் பிதா மாதாக்கள் இலங்கை வாசிகள் என்பது உருசுப்படுத்தவேண்டும்; அவர்கள் முறைப்படி விவாகஞ் செய்ததற்கு அத்தாட்சி வேண்டும்; இவைகளை நேரிற் கண்டறிந்தவர்கள் சத்தியஞ் செய்து இவைகள் உண்மைதானென்று கூறவேண்டும். இவையனைத்தையும் ஆறுமாதஞ்சென்றாலும் செய்து முடிக்கவியலாது. தவிர, இவ் அத்தாட்சிப் பத்திரங்கள் நேரிற் கண்ட சாட்சிகள் என்பனவற்றை எப்படி இலகுவில் பெறுவது? எனவே கல்வி பயிலும் மாணவர்களாகும் இவ்விளைஞர்கள், அவசியமின்றி ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க, பெரிய கஷ்டங்களை அடைகின்றனர். இது எப்படி முறையாகுமோ?

இலங்கை யரசினரை எவரும் குறைகூறவில்லை. ஒரு நோக்கத்துடன் இயற்றப் பெற்ற இப் பிரஜாவுரிமைச் சட்டம் இன்னொன்றாக முடிந்தது. ஆகையாற் காலந்தாழ்க்காது, அரசினர், இலங்கைத் தமிழர்களாயுள்ளவர்கள், அவர்கள் எங்கு பிறந்தாலென்ன, எவ்வித கஷடமுமின்றிப் பிரஜாவுரிமையைப் பெறச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும். தமிழர்கள் அதிகமாக வாழும் யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இவ் விஷயமாக விசாரணைசெய்து முடிபுக்கு வரக்கூடியதாக ஒவ்வோர் சிறு நிர்வாகசபையினரை மாகாணத்து அதிபரின் தலைமையில் ஏற்படுத்தவேண்டும். குறித்த காரியாதிகாரியால் கிராம விதானைமார், உடையார்மார் ஆகியோர் இவ் விஷயமாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும் உரிமை பெறவேண்டும். அவர்கள் கூறுவதை அரசினர் அங்கீகரிக்க வேண்டும். மிக்க பொறுப்பினையுடைய இந்த அரசாங்க உத்தியோகத்தர் ஒருகாலமும் தவறாக நடக்க மாட்டார்கள். இவர்களை அரசினர் நம்பாவிடின் வேறு யாரை நம்புவது? எனவே பிரஜாவுரிமை விஷயமாக வேண்டிய விபரங்களை மேற்காட்டிய சபையினர் நிர்வாக உத்தியோகத்தர் உதவியுடன் நிதானித்து முடிவு செய்யும் அதிகாரத்தைப் பெறவேண்டும். அதைவிட்டுக் கொழும்பு நகரிலுள்ள தலைமை யதிகாரிகளுடன் இச் சிக்கலான விஷயத்தைக் கடிதமூலஞ் செய்து முடிப்பது மிகச் சிரமமானதாகும்.

அத்துடன் எத்தனையோ பத்திரங்களைக் கொண்டுவரும் படிகேட்பதை விடுத்துப் பின்வரும் ஒழுங்குப்படி இவ் விஷயத்தைக் கையாண்டால்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)



1930

# ஈழகேசரி

சுன்னுகம், நந்தன ஹூ சித்.கடு
— காந்தி ஆண்டு 83 —
பேசுர் தந்தி இல. 805

## பிரஜாவுரிமைக் கஷ்டம்

மலாயாவிற் பிறந்த இலங்கைத் தமிழர்களின் பிள்ளைகள் இலங்கையிற் பிரஜாவுரிமையைப் பெற வியலாது கஷ்டமுறுகின்றனர். இவ்வுரிமையை அவர்கள் வேண்டியபோதெல்லாம் பெற்ருலன்றி அவர்கள் மற்றையோர் போல் சகல உரிமைகளையும் அநுபவிக்க வியலாது. சுதந்திரம் பெற்ற இலங்கையிற் பிரஜா வுரிமைச் சட்டமொன்று அவசியந்தான். ஆனுல் அச் சட்டம் அந் நாட்டைச் சொந்தமாகவுடையவர்களுக்குப் பாதகத்தை விளைக்குமாயின் அது தோன்றிய நோக்கமும் பயன்படாதன்ரோ. இலங்கையைச் சொந்த நாடாகக் கொள்ளாதோர் இலங்கையிற் பிரஜாவுரிமையை நாடுங்கால் இச் சட்டம் கருதியபடி நன்மை பயக்க வியலும். இச் சட்டத்தை அரசினர் இயற்றியபோது இலங்கையின் சொந்த மக்கட்கு அது இடையூருக முடியுமென்று சிறிதும் எண்ணியிருக்க மாட்டார். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் இச் சட்டம் அளவுகடந்த சிரமத்தை மலாயாவிற் பிறந்த, இலங்கை மக்களின் பிள்ளைகட்கு உண்டாக்கிவருகின்றது.

மலாயாவுக்கு அக்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் பெருந் தொகையாகச் சென்று பொருளீட்டி நமது நாட்டின் செல்வத்தை வளப்படுத்த உதவினர். யாழ்ப்பாண நாடு இப்போது பல வழியிலும் சிறப்புடையதாக விளங்குகின்றதாயின் அதற்குப் பெரிதுங் காரணர் மலாயா சென்று செல்வமீட்டிய தமிழர்களே. இவ்வளவு முற்போக்கான நோக்கும பணியாற்றும் வன்மையும் படைத்த இவர்கள்மீது யாவரும் நன்றி பாராட்டுங் கடமைபபாடுடையர். இவர்கள் பிள்ளைகள் இலஙகை திரும்பியதும் அவர்கட்குப் பிரஜாவுரிமை கிடைப்பது கஷ்டமாக வந்துவிடுவதாயின அதிலும் கொடிய செயல் வேறு யாது? அரசினர் இவர்கட்குப் பிரஜா வுரிமை கிடையாது என்று கூறவில்லை. பிரஜா வுரிமையைப் பெறும் விஷயத்தில் எத்தனையோ நிபந்தனைகளை நிறைவேற்றும்படி கேட்கின்றனர். இலகுவிற் செய்து முடிக்கக் கூடியனவாயின அந் நிபந்தனைகளை எவரும் ஆட்சேபிககமாட்டார்.

மலாயாவினின்று திரும்பிய இலங்கைத் தமிழரின் பிள்ளைகள எவ்வித கஷ்டமுமின்றிப் பிரஜாவுரிமையைப் பெற அரசினர் முன்னரே தாம இயற்றிய பிரஜா வுரிமைச சட்டத்தைத் திருத்தி யமைக்கவேண்டும். இலகுவிற் செய்ய வியலாத நிபந்தனைகளை ஏற்படுத்துவது அரசினர்க்கு எப்படி முறையாகுமோ? பெறவியலாத விஷயங்களைப் பெறும்படி கற்பிப்பது தர்மமாகாது. இப் பிரஜாவுரிமையை நாடும் பிள்ளைகளின் தாய் தந்தையர் இலங்கை வாசிகள், அவர்கள் இலங்கையிற் பிறந்தவர், முறைப்படி விவாகஞ் செய்தவரென அத்தாட்சிப்படுத்தவேண்டுமாம். அத்துடன் அவர்களது விவாகப் பத்திரம், பிறப்புப் பத்திரங்கள் என்பனவும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாம். இதுமாத்திரமா, இப்பிள்ளைகளின் பேரன், பாட்டன் என்போரும் இலங்கைவாசிகள் என்பதை உருசுப்படுத்த வேண்டும். இவ்வித கேள்விகளை அரசினர் நிகழ்த்துவதாற் பிரஜாவுரிமையைப் பதிவதென்பது மகா கஷ்டமாகின்றது.

ஆகவே, இலங்கையரசினர் காலந் தாழ்க்காது இலங்கைத் தமிழர்கள் அடைந்து வரும் கஷ்டத்தை நீக்க வழி காணவேண்டும். புதிய இச் சட்டத்தில் இலங்கைத் தமிழர் கஷ்டமின்றிப் பிரஜா வுரிமையைப் பதிய வழிகளை ஏற்படுத்த வேண்டும். பண்டுதொட்டு இலங்கையில் வாழ்வோர் எவ்வித காரணமுமின்றி இவ்வுரிமையை இழப்பதென்ருல் அதிலும் கொடுமை வேறு யாது? அரசினர் வேண்டுமென்று சதியான நோக்குடன் இக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தனரல்ல வென்பதை யாவரும் அறிவர். காத்திராப்பிரகாரமாக ஏற்பட்ட இந்தச் சிக்கலை அரசினர் அகற்ற வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் மலாயாவிற் பிறந்த இப்பிள்ளைகள் தமது சொந்த நாட்டிற் சகல உரிமைகளையும் பெற்று மேன்மையடைவார்கள்.

## மதுவிலக்குமகாசபை

### பிரசாரக் கூட்டங்கள்

வட இலங்கை மதுவிலக்கு மகா சபையின் பிரசாரக் கூட்டங்கள் சென்ற சில வாரங்களாக யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும நடைபெற்றுள்ளன. சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்துக்கு திரு. எஸ். கே. செல்லையா அவர்கள் தலைமை வகித்தார்.

திரு. என். இளையதம்பி அவர்களின் தலைமையில் கைதடி தெற்கில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கைதடி வடக்கில் நடைபெற்ற கூட்டத்துக்குக் கிராமச் சங்கத் தலைவர் திரு. என். இராமலிங்கம் தலைமை தாங்கினுர். சுன்னுகம் ஊர்காவற்றுறை ஆகிய இடஙகளில் நடை பெற்ற கூட்டங்களுக்கு முறையே திரு. ரீ. குமாரசாமி ஜே.பி. அவர்களும் கிராமச்சங்கத் தலைவர் திரு. எஸ். எம். றிஜ்வே அவர்களும் தலைமை வகித்தனர்.

இக் கூட்டங்களில் டொக்டர் வி. குருசுவாமி, திரு. க. நவரத்தினம், திரு. ச. அம்பிகைபாகன், வித்துவான் கா. கி. நடராஜன், வழக்கறிஞர், ஆர். என். சிவப்பிரகாசம், பண்டிதர் க. தம்பையா, திரு. கு. அம்பலவாணர், திரு. என். வி. வல்லிபுரம், பண்டிதர் கே. நமசிவாயம், ஆகியோர் மதுவிலக்கின் அவசியத்தை விளக்கி விரிவுரைகள் ஆற்றினர். கூட்டங்கள் நடைபெற்ற பகுதிகளிற் கிளைச்சங்கங்கள் அமைப்பதற்கான நிர்வாகசபைகளும் நிறுவப் பெற்றன

## சேர் கிரிப்ஸ்

### காலமானுர்

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் மாபெருந்தலைவர்களில் ஒருவரான சேர் ஸ்டாபோட் கிரிப்ஸ் சென்ற திங்கட்கிழமை (21-4-52) காலமானுர். கடந்த இருவருடகாலமாக இவர் நோய்வாய்ப் பட்டிருந்தார். இறக்கும்போது வயது 63. இந்தியாவின் சுதந்திரப்போராட்டத்தில் அனுதாபங்காட்டிய சேர் கிரிப்ஸ் காந்திஜியின் மதிப்பையும் பெற்றிருந்தார்.

## பாதை ஓரத்தில்

### பாட்டைசாரி

காசியிற் சமீபத்தில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்துக்கு அகில இலங்கைக் காந்தியசேவாசங்கத்துச்செயலாளர் திரு சி. க. வேலாயுதபிள்ளை விஜயம்செய்திருந்தார். 3000 ஊழியர்களுக்குமேல் இச் சம்மேளனத்திற் பங்குபற்றினர் என அவர் எழுதியுள்ளார். காசியில் இந் நாட்களிற் பகற்காலத்திலே நெருப்பு வெயிலெனவும் இரவிலே தாங்கமுடியாத குளிர்எனவும் தெரிகின்றது. இவ்விதமான சுவாத்தியக் கோளாறுகளையும் சமாளிக்கும் சக்திவாய்ந்த திரு. வேலாயுதபிள்ளைக்கு அங்குள்ள உணவுமுறையும் உடம்புக்கு ஒத்துக்கொண்டதையறிந்து நான் ஆச்சரியப்படவில்லை. இதுமட்டுமல்ல, இவருக்கு இன்னும் வேண்டுமென்று நான் சொல்லுகின்றேன்! அங்கு அவருக்கு விநேபாஜி அவர்களுடன் தமிழிற் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. பத்து நிமிஷம்வரை இனிய தமிழில் இருவரும் பேசினர். திருக்குறள் மூலம் தமிழரின் அரிய பண்பாடுகளை விநேபாஜி அறிந்து பெருமையடைகின்ருர் என்பதை அறியும்போது சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் அறிஞர் தனிநாயக அடிகளார் பேசிய சில வார்த்தைகள் மீண்டுங் காதில் ஒலிக்கின்றன. "தமிழறிஞர் தமிழைச் செந்தமிழ், தேனதமிழ், வண்டமிழ் ... ... என்றெல்லாம் போற்றுகின்றனர். அவ்வன்பிற் பிறரும் பங்குபெற்று, உலகம் பெருவாழ்வு அடையுமாறு நாமனைவரும் ஒருங்கு சேர்ந்து உழைப்பதே, இவ் வழகிய மொழியை நமக்குத் தாய்மொழியாகத் தந்த இறைவனுக்கு, நாம் காட்டும் நன்றித் தொண்டாகும்.

"என்னை நன்ருக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ்
செய்யுமாறே."

விநேபாஜி திருக்குறள் படிப்பதுடன் அதனை மராட்டியில் மொழி பெயர்த்தும் வருகின்ருர். திருவாசகம், திருக்கோவையார் போன்ற பக்திநூல்களையும் அவர் படித்தின்புறுகின்ருர். யாழ்ப்பாணத்துத் தமிழில் அவருக்கு மிகுந்த ஆசையிருப்பதாகத் தெரிவித்தாராம். தமிழின் இனிமை யாரைத்தான் விட்டுவைக்கின்றது.

❖

### தமிழ் விழா

அமுதனைய தமிழைப் பற்றி எழுதும்போது சென்ற வருடம் தமிழ் விழாவிற் பங்குபற்றியவர்களுக்கு உச்சிகுளிரத்தான் செய்யும். கடந்த சிலவாரங்களாக 'இவ்வாண்டு தமிழ் விழா எங்கே நடைபெறும்?' என்று நண்பர்கள் பலர் எழுதியவண்ணமாகவே இருக்கின்றனர். நேற்று முன்தினம் சென்னை அன்பர் ஒருவரிடமிருந்து கிடைத்த செய்தியின்படி தமிழ்விழா இவ்வாண்டு தருமபுரத்தில் நடைபெறுமென்பது நிச்சயமாகிவிட்டது. திகதி உறுதியாகவில்லை.

❖

### இசை விழா

சமீபத்தில் இரசிக இரஞ்சன சபையின் ஆதரவில் யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற இசை விழா இரசிகர்களிடையே மிகுந்த ஆர்வத்தை உண்டாக்கியிருப்பதையறிந்து மகிழ்கின்றேன். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதியில் விரைவில் மற்றுமோர் இசைவிழா நடைபெறுமெனத் தெரிகின்றது. இசைவளர்ப்போர் இன்பத்தை வளர்க்கின்றனர். இசை வாழ்க! இன்பம் பெருகுக.

❖

### மிஸ்டர் அணுக்குண்டு

மிஸ்டர் அணுக்குண்டு இருக்கின்ருரே, இவர் பலே பேர்வழி! பெரிய தேர்தல்களின்போதுதான் இவர் தலை நீட்டுவது வழக்கம். 1947-ல் நடைபெற்ற தேர்தல் காலத்தில் மிஸ்டர் அணுக்குண்டு அவர்களே ஈழகேசரியில் 'தேர்தற்கோட்டை' என்ற பகுதியை ஆரம்பித்துத் தேர்தல் விஷயங்களைப்பற்றிப் பொடி வைத்துத்திட்டிவந்தார். சோணசலம் பட்டிக்காட்டுப் பேர்வழியென்ருல், அணுக்குண்டு நவநாகரிக ஆசாமி. காலத்துக்கேற்ற நாமந்தானே! தேர்தற் பிரசுரங்களை விழுங்கிக் கடதாசிக்கற்றையாகிப்போன மிஸ்டர் அணுக்குண்டு பேனுவுக்குப்பதிலாகத் தூர்க்குச்சிசகிதமாகக் காட்சி தருகின்ருர். இவருக்கு வாசகர்களினுதவி வேண்டும். தேர்தல்சம்பந்தமான துண்டுப்பிரசுரங்களை இவருக்கு அனுப்பிவைபபதே அந்த உதவி. அணுக்குண்டு ஈழகேசரிக் காரியாலயம், சுன்னுகம்எனவிலாசமிடவேண்டியது. அனைவருக்கும் கைமேற்பலன்கிடைக்கும்.

## கிழக்கு மாகாணத்தில் தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை போட்டியிடுகின்ருர். அதற்கான வேலைகளிலும் ஈடுபட்டுவிட்டார். இவரைச்சுயேச்சையாளர்களான திருவாளர்கள் எஸ். சிவஞானமும, தவநாயகமும் எதிர்த்துப போட்டியிடுவார்களெனத் தெரிகின்றது. திரு. சிவஞானம் அவர்களின் போட்டியைப்பற்றி மக்கள் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகின்றனர். இவர் ஒரு பாதுகாப்பு அணிபாகமுன வந்துள்ளார்எனத்தெரிகின்றது.

பட்டிருப்புத் தொகுதிக்குத் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் அவர்கள் இம்முறையும் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட முன்வந்துள்ளார். யூ. என். பி. கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் அவர்களுக்குப் பெரிய ஆதரவு இருப்பதாகத் தெரிகின்றது. திரு. எஸ். அருளம்பலம் என்பவரும் இத் தொகுதிக்குச் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடுவாராம்.

கல்முனைத் தொகுதியில் எவ்வித ஆர்ப்பாட்டத்தையும் காணவில்லை. யூ. என். பி. அபேட்சகரான ஜனுப் எம். எஸ். காரியப்பரைச் சுயேச்சையாளர்களான ஜனுப் மீரா, ஜனுப் எம். ஏ. எல். காரியப்பர் என்போர் எதிர்த்து நிற்பார்கள்எனநம்பப்படுகின்றது.

பொத்துவில் தொகுதியிற்போட்டி மிகப் பலமாக இருக்குமென எதிர்பார்க்கலாம். யூ. என். பி. அபேட்சகரான ஹாஜி எம். எம். இப்ராஹீம் அவர்களை வழக்கறிஞர் ஜனுப் ஏ. எம். முஸ்தாபா அவர்கள் சுயேச்சையாளராக எதிர்த்து நிற்பார். இவர் ஜனுப் எம். எஸ். காரியப்பர் (கலமுனை யூ. என். பி.) அவர்களின மருகன் ஆனபடியால் ஜனுப் காரியப்பருக்கு வேண்டியவர்கள ஜனுப் முஸ்தாபாவுக்கு ஆதரவு அளிப்பார்களெனப் பேசிக்கொள்ளுகின்றனர். இத் தொகுதிக்குத தமிழர் ஒருவர் போட்டியிட்டால் அவர் வெற்றிபெற இடமுண்டு. தமிழர் ஒருவர் போட்டியிடப்போகின்ருரென்ற வதந்தியும் நிலவுகின்றது.

திருகோணமலையிலே தான் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு இருந்துவருவதாகக் கதை. தமிழ் இராச்சியத்தைத் திரு.செல்வநாயகம் கோஷ்டியினர் ஸ்தாபிக்கும் தருணத்தில் திருகோணமலையே தமிழரசின கேந்திரஸ்தானமாக விளங்குமாம்! இங்கிலவந்தால் பாவம், அமெரிக்காவும் பிரிட்டனும் இலங்கையைவிட்டுத் தப்பினேம் தப்பினேமென்று ஓட்டம் பிடிக்கவேண்டியதுதான. திருகோணமலைத் தொகுதிக்குத் திரு. எஸ். சிவபாலன் அவர்களை யூ. என். பி. கட்சி நியமித்துள்ளது. இவரை எதிர்த்துத் திரு. என். ஆர். இராஜவரோதயர் (தமிழரசு)போட்டியிடுகின்ருர். திரு. கே. சிவபாலன பி. ஏ. அவர்களும் வேறுமோர் முஸ்லீம் பிரமுகரும் சுயேச்சையாளராகப் போட்டியிடுவார்கள்என்ற செய்தியும் நாட்டிற் பரவிவருகின்றது.

மூதூர்த் தொகுதியிலே தேர்தலின் மந்தமாக இருக்கின்றது. ஜனுப் ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் யூ. என். பி. கட்சியைச்சேர்ந்தவர். இவரைச்சுயேச்சை அபேட்சகர் எம். ஈ. எச். அலி அவர்கள் எதிர்த்துப் போட்டியிடக்கூடும். இம் மாதம 28-ந் திகதி மந்தநிலைகுலைந்துயாவும்வெளிச்சமாகிவிடும்

இப்படியே கிழக்குமாகாணத்திலுள்ள ஏழு தொகுதிகளிலும் தேர்தல நிலைமை ஆரவாரமாகவும் பரபரப்பினறியும் காணப்படுகின்றது.

**WANTED**

For the Jaffna Saiva Training College, Tinnevely, **part time teachers** for (a) **Arts** (b) **Crafts.** Salary same rates as for part-time teachers of Government Training Colleges.

Apply to the General Manager of Schools, Hindu Board of Education, Jaffna.

**தேவை**

திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு (a) சித்திரம் (b) கைப்பணி ஆகியவற்றைப் பயிற்றக் கூடிய பகுதி நேர ஆசிரியர்கள் தேவை. அரசினர் பயிற்சிக் கலாசாலைகளிலுள்ள பகுதி நேர ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் விகிதப்படி சம்பளம் அளிக்கப்படும்.

பாடசாலைகளின் பொது முகாமைக்காரர், சைவ வித்தியா விருத்திச் சங்கம், யாழ்ப்பாணம், என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்

# காஷ்மீர் பிரதமரின் விபரீதம்
## பாகிஸ்தான் இதையிட்டு ஆனந்தம்

காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா சமீபத்திற் செய்த பிரசங்கம் பாகிஸ்தானில் மிக்க ஆர்ப்பாட்டத்தை உண்டாக்கி விட்டது. இப்போதான் ஷேக் அப்துல்லா உண்மையை உணர்ந்தார் என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் துள்ளிக்குதிக்கின்றன. ஷேக் அப்துல்லாவின் பேச்சுப்படி இந்தியாவிற் காஷ்மீர் வாசிகள் பூரணமாக நம்பிக்கை வைப்பது எப்படி என்று கேட்கப்படுகின்றது. பிரதமர் நேருவின் பின் இந்தியாவில் வகுப்புவாதம் மிகுந்து காஷ்மீரை இந்தியா விழுங்கிவிடுமென்று எண்ணுவது பெருந்தப்பு, சனநாயக அரசியலில் ஷேக் அப்துல்லாவுக்கு நம்பிக்கையில்லாதிருப்பது நகைப்புக்கிடமாகின்றது. காஸ்மீர் சமஸ்தானம் காஸ்மீர் மக்கள் எண்ணப்படி பரிபாலிக்கப்பட வேண்டுமென்பதில் இந்தியாவில் இரு வேறு அபிப்பிராயங் கிடையாது. பாதுகாப்பு, போக்குவரத்து, அங்கியநாட்டுத் தொடர்பு ஆகிய மூன்று விஷயங்களுந்தான் இந்திய அரசினர் கையில் இருக்கும். காஷ்மீருக்குமாத்திரமல்ல மற்றைய சமஸ்தானங்களும் இப்படியே. பாகிஸ்தானுடன் சேர்ந்துகொள்ள ஷேக் அப்துல்லா விரும்புகின்றாரென நாம் கூறவில்லை. அவசியமில்லாமற் பாகிஸ்தானிலே போலிக் கிளர்ச்சி எழுப்புவதற்கு அப்துல்லா இடம் கொடுத்ததுதான் கவலையை உண்டாக்குகின்றது.

### எல்லைப்புறக்காந்தி

எல்லைப்புறக்காந்தி எனப்படும் அப்துல் கபார்கான் கொடிய நோயினுற் பீடிக்கப்பட்டுள்ளார். வைத்திய சிகிச்சையின் பொருட்டு லாகூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். குடலில் ஏற்பட்டநோய் சத்திர வைத்தியஞ்செய்தே குணமாக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இவரை இனியாவது பாகிஸ்தான் அரசினர் விடுதலை செய்யக் கூடாதா என்று கேட்கின்றோம். இந்தியவரசினர் இவ்விஷயமாகப் பன்முறை புத்தி கூறியும் பாகிஸ்தான் அரசினர் கேட்கின்ருரில்லை. கபர் கான் அவர்களை விடுதலை செய்துவிட்டால் ஒருபோது பாகிஸ்தானுக்குப் பெரிய ஆபத்துவருமென எண்ணுவதற்குச் சிறிதும் ஆதாரம் கிடையாது. பலாத்காரத்தில் நம்பிக்கை சிறிதுங்கொள்ளாது அஹிம்சையை மேற்கொண்ட எல்லைப்புறக்காந்தியால் எவர்க்கும் தீமையுண்டாகக் காரணமில்லை. நீடித்த நோயால் வருந்திக் கொண்டிருக்கும் இத்தியாகியைப் பாகிஸ்தான் அரசினர் விடுதலை செய்வது நற்செயலாகும். சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட இப்பெரியாரைப் பாகிஸ்தான் அரசினர் மறுபடியும் சிறையில் வைத்துத் துன்புறுத்துவது கவலைதருவதாகும்.

## இந்தியா

### குடியரசுத் தலைவர்

இந்திய குடியரசுத் தலைவர் பதவிக்கு ஐவர் அபேட்சகர்களாக வந்துள்ளார். காங்கிரஸ் கட்சியினரால் பிரேரிக்கப்படும் இராஜேந்திரப்பிரசாத் அவர்களே தெரியப்படுவாரென்று நிச்சயமாக அறிந்த பின்னரும் மற்றையோர் இப்பதவியில் வெற்றிபெறலாமென முன்வந்தது நூதனமாகின்றது. கொம்யூனிஸ்ட் கட்சியினரின் அபேட்சகராகப் பேராசிரியர் ஷா அவர்கள் முன்வந்தது மிக ஆச்சரியமாகின்றது. நாட்டின் நிலைமையை நன்கறிந்த இவர் எப்படி இதற்கு உடன்பட்டனரோ? உதவிக் குடியரசுத் தலைவராகப் பேராசிரியர் இராதா கிருஷ்ணன் தெரியப்படுவது நிச்சயம்.

### தண்ணீர்ப் பஞ்சம்

தென்னிந்தியாவில் உணவுப் பஞ்சத்தின் கொடுமை மேன்மேலும் கோரநிலை அடைவது ஒருபுறமாருக தண்ணீர்ப் பஞ்சமும் அத்துடன் தோன்றி யாவர்க்கும் இடைஞ்சலை உண்டாக்கி வருகின்றது. இப்போது பஞ்சந்தோன்றிய கர்நூல், கடப்பா ஜில்லாக்களிலுள்ள கூபங்களில் நீர் கிடையாதாம். இந்த ஜில்லாக்களில் மாத்திரமல்ல சேலம் வட ஆற்காட்டு முதலிய ஜில்லாக்களிலும் தண்ணீர்ப்பஞ்சம் தோன்றியுளது. சென்ற ஐந்து ஆறு வருடங்களாகப் போதியளவு மழை பெய்யாமையேயிதற்குக் காரணம். சென்னை மாகாணத்திலுள்ள ஐம்பது நகரசபைப் பிரதேசங்களில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

### கோவாவில் மந்திரி

போத்துக்கேயருக்குச் சொந்தமான கோவாப் பிரதேசத்தை நேரில் தரிசித்து விஷயங்களை உற்றுணரப் போத்துக்கல் தேயத்திலிருந்து ஒரு மந்திரியார் அங்கு வருகின்றனர். அவரை வரவேற்க மிக்க செலவுடன் ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இம் மந்திரியார் கோவாவில் வசிக்கும் இந்தியரின் மனப்பான்மையை உள்ளபடி அறிவாரா என்பது சந்தேகம். உண்மைத் தலைவர்கள் அநேகர் சிறையில் இருக்கின்றனர். வேறு சிலர் இந்தியாவுக்குள் ஓடிவந்து வாழ்கின்றனர். இவர்களை விடுதலை செய்து நல்ல சூழலில் விஷயங்களைக் கலந்து ஆலோசித்தாலன்றி உண்மையை இம்மந்திரியார் அறியப்போவதில்லை. பம்பாயில் வசிக்கும் கோவாப்பிரதேச வாசிகளிடம் கேட்டறிந்தால் உண்மை விளங்கும்.

## மானத் தமிழினம் மதி மயங்காது!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து தமிழரசிக் கட்சியினருக்குத் தூபம்போட எண்ணுவார்களாயின் அவர்கள் தமிழினத்துக்கு ஆபத்தை உண்டாக்குபவர்களாகவே கருதப்படுவார்கள்.

### தடுமாற்றம்

தமிழரசுக் கட்சியினரின் தடுமாற்றம் நாட்டிற் சிறிது ஆர்ப்பாட்டத்தை உண்டுபண்ணி வருவது உண்மைதான். ஆனல் இவர்களுக்கு மக்களிடையே போதிய ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத் தொகுதிகளில் தமிழரசுக் கட்சியின் சார்பாகப் போட்டியிடக் கிளம்பியுள்ள ஒருசில அபேட்சகர்கள் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தில்லு முல்லுப் படுவதே இதற்குச் சான்று. ஆகவே, தமிழ் மக்கள் உண்மை நிலையை உணர்ந்து நன்மை வழியைக் கடைப்பிடித்துத் தமிழினத்தின் பெருமையை நிலைநாட்ட முற்படவேண்டும்.

## சாவகச்சேரியில்
### சனசமூக நிலையம்

சாவகச்சேரி இரண்டாம் வட்டார சனசமூக சேவா சங்க நிலையம் சென்ற புதன்கிழமை (23-4-52) திறந்து வைக்கப்பட்டது. பொதுக் கூட்டத்துக்கு திரு. வ. வி. தம்பிராசா அவர்கள் தலைமை வகித்தார்கள். காரியாதிகாரி திரு. எஸ். பி. தெய்வேந்திரம்பிள்ளை, திரு. வி. குமாரசுவாமி, திரு. என். அருணாசலம் ஆகியவர்கள் விரிவுரைகள் ஆற்றினர்.

## வானிசை

★ வசந்தன் ★

### கொழும்பு வானொலி

**இலங்கை வானொலியில்** நடைபெற்றுவரும் சிங்கள நிகழ்ச்சிகள் கூடச் சிங்கள இரசிகர்களுக்குப் பிடிப்பதாயில்லை. பொதுவாக இலங்கை வானொலியிற் கைச்சரக்குக் 'கம்மி'யாகிவிட்டதென்றே கூறவேண்டியிருக்கின்றது. தமிழ்நாடகங்களின் தரம் குறைந்துவருவதுடன் புதிய நாடகங்களை எழுதுபவர்களுக்கும் உற்சாகம் குன்றிவிட்டதெனக் கூறுவதா? ஆங்கிலத் தினசரி ஒன்று குறிப்பிட்டிருப்பதுபோல இசைத்தட்டு நிகழ்ச்சிகள் கொழும்பு வானொலியில் அதிகரித்திருப்பதுடன் சதா போட்டுச் சாணையற்ற இசைத் தட்டுகளின் 'கிறல்'சத்தத்தையும்இசையென்ற பெயரால் கேட்டு அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவருகின்றது. வானொலிநிகழ்ச்சி விபரங்களிலும் அதிகமான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. தினசரிப் பத்திரிகைகள் வானொலி நிகழ்ச்சி விபரங்களை முறையாக வெளியிட விரும்பினுல் கொழும்பு வானொலி நிலையத்துடன் அதிக தொடர்பு வைத்து அன்ருட நிகழ்ச்சிகளை வெளியிடவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்ரேம்.

**திரு. வைத்தீஸ்வரா ஐயர்**

வயலின்— இவருடைய வாசிப்பின் முழு விசேஷத்தையும் ஓளவில் குழப்பியது இவருடைய பக்கவாத்தியமாகிய மிருதங்கம். இவருடைய கச்சேரிக்குத் தம்புரா மீட்டப்பட்டதோ இல்லையோ என்று சந்தேகமாக இருக்கிறது. ஐயர் அவர்கள் வாசித்த சங்காராபரணம் பல இனிமையான சஞ்சாரங்களைக் கொண்டிருந்தது.

**திருமதி விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை**

பாட்டு — சூரவினிமை மாத்திரம் இருந்தால் கச்சேரிகள் இரசிக்கக்கூடியவையாக அமையுமென்பது பொருந்தாது. பாணி அழகு கற்பனைத்திறன் முதலிய அம்சங்களும் வேண்டும். இவைகளை விருத்தி செய்வது நல்லது. இவர் பாடிய தோடி இராகம் நன்ருயிருந்தது. சாதக பலத்தினுல் அபஸ்வரம் உண்டாகாமற் பார்த்துக்கொள்ள முயல வேண்டும். பக்கவாத்தியங்களின அனுசரணை போதாதிருந்தது.

ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்

**இலங்கையர்கோன்**

எழுதிய

## ❋ ஓர் இரவு ❋

அடுத்த வாரம் வெளியாகின்றது


### அடைவு நகை ஏல விற்பனை

பருத்தித்துறை தும்பளை வடலிப்பாதியிலிருக்கும் அடைவு பிடிக்கும் விணுசித்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்களிடம் 1949 ஆம் தை மாதம் 1உ முதல் 1950 ஆம் மார்கழி மாதம் 31உ வரையுள்ள மீளாத நகைகள் யாவும் 1952 ஆம் வைகாசிமீ 12உ பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து என்னுல் ஏலத்தில் விற்கப்படும்.

ஆ. வே. நாகலிங்கம்
வெந்திஸ்மேஸ்தர்

புலோலி மேற்கு,
பருத்தித்துறை [4582—ii]


## கொழும்பு-நீருபர் கடிதம்



# சத்தியாக்கிரகப் போருக்குத் தயார்
## இலங்கை இந்தியர் தூது விணுயிற்று

25-4-52

இலங்கை இந்தியக் காங்கிரஸ் வதுளையிற் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களைப் பற்றியே அரசியல் வட்டாரங்களிற் பேசிக்கொள்ளுகின்றனர். இலங்கை வாழ் இந்தியருக்குப் பிரஜா உரிமை வழங்கவேண்டுமெனவும் பொதுத்தேர்தலில் இந்திய வாக்காளர்கள் அனைவரும் பங்குபற்றித் தங்கள் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் இக்கணமே செய்யவேண்டுமெனவும் இலங்கை இந்தியக் காங்கிரஸ் வேண்டிநிற்கின்றது.

### தூதுக்கோஷ்டி

இலங்கை இந்தியக் காங்கிரஸ் தூதுக்கோஷ்டியொன்று 21-4-52 திங்கட்கிழமை பிரதமர் டட்லி சேனநாயகா அவர்களைக் கண்டு பேசியது. பொதுத் தேர்தலில் இலங்கை இந்தியர்கள் பங்கெடுத்துக்கொள்ள முடியாதவகையில் வாக்குரிமைகளை இழந்திருப்பதால் ஏற்பட்டிருக்கும் பரிதாப நிலைமையை அவர்கள் பிரதமருக்கு எடுத்துரைத்தனர். ஆனல் பிரதமர் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாதெனக் கையை விரித்துவிட்டார்.

### சத்தியாக்கிரகம்

புதன்கிழமை யிரவு இலங்கை இந்தியக் காங்கிரஸ் அவசரமாகக் கூடி முக்கியமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. சீவாதார உரிமைகளைப் பெறுவதற்கும் பொதுத் தேர்தலில் வாக்குரிமை பெறுவதற்குமாகச் சத்தியாக்கிரக இயக்கம் ஒன்றினை ஆரம்பிக்க வேண்டுமென்பதே காங்கிரஸ் செய்துள்ள முடிபாகும்.

### இந்தியா கண்டனம்

இலங்கைவாழ் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டுமென்பதை வற்புறுத்துமுகத்தால் இந்தியாவிலுள்ள பத்திரிகைகள் அத்தனையும் இலங்கையின் போக்கை வன்மையாகக் கண்டித்துவருகின்றன. 'இலங்கை இரண்டாவது தென்னுபிரிக்காவா?' என்று கூட ஒரு பத்திரிகை இலங்கையைத் தாக்கியிருக்கின்றது. இத்தனைக்கும் இலங்கை அரசாங்கம் அவசரச்சட்டமியற்றி வாக்குரிமை வழங்க முடியாதென மழுப்பிவிட்டது!

### அரசியற் கட்சிகள்

யூ. என். பி. கட்சி அநேகமாகச் சகல தொகுதிகளுக்கும் அபேட்சகர்களை நியமித்துவிட்டது. சமசமாஜக் கட்சியின் சார்பாக 40 அபேட்சகர்கள் போட்டியிட வந்துள்ளனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 44 அபேட்சகர்களை நியமித்துள்ளது.

### யோகி சுத்தாநந்தர்

யோகி சுத்தாநந்த பாரதியார் அடுத்த மாதம் 7-ந் திகதி மலாயாவுக்குப் புறப்படுகின்ருர். மலாயா செல்லும் வழியில் கொழும்பில் தங்கிநிற்பதுடன் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யக்கூடுமென ஒரு செய்தி கிடைத்துள்ளது.

# புதுக்கோட்டையில்
## முத்தமிழ் மாநாடு

புதுக்கோட்டை முத்தமிழ் மகாநாட்டுச் செயற் குழுவினர் ஈழகேசரிக்கு எழுதுவதாவது: புதுக்கோட்டை நகரில், தமிழத்துறையில் ஈடுபட்டுழைத்துவரும், புலவர் பெருமக்களையும், அரசியல் துறையில் வல்லார் பலரையும் அழைத்து முத்தமிழ் மாநாடு ஒன்று வரும் மே மாத இறுதியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

செயற்குழுவினர் நிறைவேற்றிய தீர்மானங்கள் வருமாறு:

1. புதுக்கோட்டை மன்னர் அவர்களைத் திறப்பாளராகவும், முறையே நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், சேர் ஆர். கே. சண்முகம் செட்டியார், கனம் சென்னை முதல் மந்திரி இராஜகோபலாச்சாரியார் ஆகியோர் தலைவர்களாகவும் மாநாட்டினை மூன்று நாட்கள் நடத்துவதெனை முடிவுசெய்யப்பட்டது.

2. கீழ்க்காணும் தமிழறிஞர்களைக்கொண்டு விரிவுரைகள் ஆற்றுவதென முடிவுசெய்யப்பட்டது:

திருவாளர்கள் டொக்டர் மு. வரதராசனுர், பேராசிரியர் சேதுப்பிள்ளை, டொக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், ஞா. தேவநேய பாவாணர், வெள்ளைவாரணனுர், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிகர் அவர்கள், சோமசுந்தரத் தம்பிரான், க. அன்பழகன், கி. வா. ஜகந்நாதன், சுவாமி சித்பவானந்தா, ம. பொ. சிவஞானகிராமணியார், ஜி. சுப்பிரமணியப்பிள்ளை, அ. சரவண முதலியார், மயிலை சிவமுத்து, கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி, கி. ஆ. பெ. விசுவநாதம், வி. ஆர். ஸ்ரீநிவாஸன், ஏ. என். சிவராமன், எஸ். எஸ். வாஸன், என். எஸ். கிருஷ்ணன், புலவர் குழந்தையம்மான், தனிநாயகம், புலவர் இளவழகனுர், தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், சௌந்தரம் ராமச்சந்திரன், கா. அப்பாத்துரை, ஒளவை சு. துரைசாமி, யாழ்ப்பாணம் சு. நடேசபிள்ளை, சி. என். அண்ணுத்துரை, ப. ஜீவானந்தம், பெ. தூரன், 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியம், அய்யன் பெருமாள் கோனுர், பாரதிதாசன், புலவர் அரங்கசாமி, ரா. வேங்கடாசலம், மற்றும் பலர்.

3. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் (அரசவை) கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, யோகி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் முன்னிலையில் கவியரங்கம் ஒன்று ஏற்பாடு செய்வதென முடிவுசெய்யப்பட்டது.

4. இசையரங்கில், இசையரசு எம். எம். தண்டபாணிதேசிகர், கோகிலகான இசைவாணி எம். எஸ். சுப்புலட்சுமி, மதுரை சோமசுந்தரம் ஆகியோரைப் பங்குகொள்ளுமாறு அழைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

5. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களை மகாநாட்டிற்கென ஒரு நிதி நாடகம் நடத்தித் தருமாறு வேண்டிக் கொள்ளுகின்றது.

## திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை

இக் குருபூசை மறவன்புலோ கி. மு. சங்கம், ச. ச. நிலையம், பெற்ருேர் ஆசிரிய சங்கம் ஆகியவைகளின் ஆதரவில் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை மண்டபத்தில் 20-4-52 ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாயிற்று. பகல் 12 மணியளவில் தலைமை ஆசிரியர் திரு. கா. பொன்னம்பலம் அவர்களின் தலைமையிற் கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் அவ் வித்தியாசாலை மாணவி செல்வி க. நாகம்மா திருநாவுக்கரசு நாயனுரின் சரித்திரத்தை எடுத்துரைத்தார். திருவாளர்கள் க. கனகசபை, நா. காங்கேயர், ஏ. பொன்னையா, இரு. சின்னத்தம்பி என்பவர்களும் நாயனுர் பற்றிப் பேசினர். தலைவரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

# உறவு மலர்ச்சி

### 10. நடராசன்

இரண்டு மாசங்களுக்கு முன் ஆனந்தனின் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினேன். பதிலேயில்லை. பின்பு பதிலையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஏன் அவளிடம் போய்வந்தால் என்ன என்றும் வத்ஸலாவும் பத்மநாபனும் பலமுறை கேட்டார்கள். ஆனால் அவர்களது முகத்தில் எப்படிப் போய் விழிப்பது?

ஒவ்வொருநாளும் கடிதத்தை எதிர்பார்ப்பேன். காலை ஒன்பதரை மணி எப்போது வரும்? என்று ஆவலுடன் துடிப்பேன். அப்படியே பல ஒன்பதரை மணி போய் மறைந்தன. ஆனற் கடிதங்களோ வந்தபாடில்லை.

நாட்கள் செல்லச் செல்ல ஆனந்தனின் தாயார் இறந்த செய்தியும் வெளியானது. செந்தாமரைப் பத்திரிகையில் அவளது படமும் வெளியிடப்பட்டிருந்தது. அத்துடன் எனது மனமும் இருண்டுவிட்டது. இனி எப்படி வருவான் ஆனந்தன் என்று கலங்கினேன்.

அன்றொருநாள் நான் செந்தாமரை இதழ் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தேன். அதிலே 'இவ்வளவு காலமும்' ஆசிரியராகக் கடமை ஆற்றிய ஆனந்தன் வேலையினின்றும் விலகிவிட்டார்" என்று பிரசுரஞ் செய்யப்பட்டிருந்தது. எனக்கு எல்லாம் ஏதோ புதிராக இருந்தன! ஆனல் மறுநாள் ஆனந்தனின் கடிதம் ஒன்று வந்தது. அதிலே

இ. அம்பிகைபாகன்

தான் வேலையை விட்டு விட்டு என்னிடம் வருவதாக எழுதி இருந்தான். அத்துடன் அவன் தன் வாழ்வில் நடந்த எல்லாவற்றையும் எழுதி இறுதியில் பத்மினிக்கு அதைக் காட்ட வேண்டாம் எனவும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டான்.

அவனது வாழ்வை எண்ணியபோது நானே அந்த ஏமாற்றங்கள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாளி என்று என் மனமே ஒப்புக்கொண்டது. ஆனல் போனதை நினைந்து நினைந்து கண்ணீர் சிந்துவதில் எவ்வித பயனுமில்லை. அன்று இரவே அவனுடைய வீட்டிற்குப் போகலாமோ? என்று எண்ணினேன். ஆனற் சிலநாட்கள் கழித்து அவனே அறிவித்துவிட்டு வந்து விடுவதாக எழுதிய கடிதம் எனக்கு எவ்வளவோ ஆறுதலைக் கொடுத்தது.

எனது சகோதரியின் வாழ்க்கை புது எழிலுடன் விளங்க இதுவே போதும் என்று மனம் மகிழ்ந்தேன். அதன்பின் ஆனந்தனின் கடிதம் எப்போ வரும்? எப்போ சேருவான்? என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இனி எப்படியும் விரைவாகவே அவன் வருவான் என்ற எண்ணம் எனக்கு எவ்வளவோ மன அமைதியைக் கொடுத்தது.

### 11. பத்மினி

"பத்மினி" என்று சொல்லிக்கொண்டு அறையுட் புகுந்தார் அண்ணு. இவர் ஏன் இப்படிக் கூப்பிடுகிறுர்? என்று ஒருகணம் எண்ணினேன். அதற்கிடையில் அவரே "இன்று இரவு வண்டியில் ஆனந்தன வருவார். ஸ்ரேஷனுக்குப் போகவேண்டும். நீயும் வாலாம். ஆயத்தஞ் செய்" என்றுவிட்டுத தனது வேலையைக் கவனிக்கலானுர்.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆனந்தன் ஏன் வரப்போகிறுர்? வந்தாலும் நான் ஏன் போய்ச் சந்திக்கவேண்டும்? முன்பு என்னையும் அவரையும் பிரித்துவைத்த அண்ணு இன்று ஏன் இப்படிச் சொல்லவேண்டும்? அவரிடமே எல்லாம் விபரமாகக் கேட்டறிய விரும்பினேன்.

"ஏன் அண்ணு நான் வரவேண்டும்?" என்று நான் அவரிடம் நேரே கேட்டேன்.

"பேசிக்கொண்டிருக்க இது சமயமல்ல; இதையே வாசித்துவிடு" என்று கடிதத்தை என்னிடம் கொடுத்தார்.

ஆம், அவரது மணிமணியான எழுத்துக்கள். ஆவலுடன் அதை வாசித்தேன்.

அது கடிதம் அல்ல, கதை. அவரது வாழ்வை மிகவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் அதில் எழுதியிருந்தார். அதிலே நான் கண்டு உணர்ந்தது ஒரே ஒரு உண்மையை மட்டுந்தான். அதுதான் இந்தச் சந்தேகத்தின் விளைவு. எனது வாழ்வின் இன்னல்களுக்கு எல்லாம் காரணம் சந்தேகம். என்மீது, எனது காதல்மீது; அவர் சந்தேகம் கொண்டது ஒன்றேதான். இல்லாவிட்டால் உள்ளதை உள்ளபடி அறியச் சற்றுக் கஷ்டப்பட்டிருந்தால், பத்மநாபன் அன்று சொன்னது எவ்வளவு உண்மையென்று தீர அறிந்திருந்தால் இவ்வளவு கஷ்டங்களும் இல்லை! அவருக்கு வாழ்வில் இத்தகைய ஏமாற்றங்கள் இல்லை. காதல் உள்ளங்களிலே புயலை எழுப்பி, மொட்டுக்களையும் மலர்களையும் உலுப்பிச் சேதஞ்செய்து இன்பக் கனவுகளையெல்லாம் தரைமட்டமாக்கி விடுகிறது இச் சந்தேகம்.

ஆனல் இன்று விமலா வாழ்ந்திருந்தால்?

இதை எண்ணியபோது சர்வம் இருள்மயமாகவே இருந்தது. அதுதானே அந்தப் புண்ணிய சீவன் இயற்கை எய்திவிட்டது என்று அவளையும் வாழ்த்தி நினைத்துக்கொண்டேன்.

* * *

ஸ்ரேஷனில் நிற்கலானேம். நல்ல இருள். சடுதியாக மின்னல் ஒளி இருளைக் கிழித்து மறைந்தது. அதைத் தொடர்ந்து வானைப் பிளந்துகொண்டு இடி முழக்கமும கர்ஜித்தது. துளி துளியாகத் தூறிய மழை கொட்ட ஆரம்பித்தது. காற்றும் கை கொடுத்தது. மரங்கள் சுழன்றன. வெள்ளம் பெருகியது. உடல் குளிரால் நடுங்கியது. ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றேம். சில நிமிஷங்களில் பின்பும் அமைதி நிலவியது. இங்கும் அங்குமாகப் பல விண்மணிகள் வானத்தில்நின்று கண்சிமிட்டின.

இப்பொழுதுநிலவிய அமைதியில் ஒரு தனிச் சாந்தம் இருந்தது. அதிலே ஒரு தனிப் பசுமை நிலவியது.

மழையிலே அகப்பட்டு நனைந்து குளிரால் நடுங்கும் ஒரு சிறு குழந்தையைக் கையில் ஏந்தியவண்ணம் வந்து சேர்ந்தாள் ஒரு இளம் பெண். தனது நனைந்த சேலையின் ஒரு தலைப்பைப் பிழிந்தாள். அதனுல் பிள்ளையின் ஈரத்தைத் துவட்டினுள். அதன்பின் தன் மார்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டாள். அந்த அணைப்பிலே, அவளது கரங்களுள்ளே இன்பமாகத் தூங்க ஆரம்பித்தது அக்குழந்தை.

அவளையும் அவளது குழந்தையையுமே பார்த்தவாறு என்னை மறந்து நின்றேன்.

அந்தக் கன இருளைக் கிழித்துக்கொண்டு தொலையில் ஒரு பிரகாசமான ஒளி தோன்றியது. எனது உள்ளத்தில் கவிந்திருந்த இருளையும் அது கிழித்தது. ஏன்?—

வண்டிவந்து நின்றது. அங்கும் இங்கும் பலர் ஓடினர். அவர்களுள்ளே அவளும் மறைந்தாள். ஆனல் அவளைத் தேடவில்லை என் கண்கள்; அங்கே வந்துநின்ற வண்டியில் 'அவரை'த் தேட ஆரம்பித்தன.

சிறிதுநேரத்தில் அவர் என் முன் நின்ருர். ஆனல் கண்கள் தரையைப் பார்த்தன. நீர்த்துளிகள் படபடவென்று உருண்டு விழுந்தன. நான் அவரது முகத்தையே பார்த்துப் பார்த்துப் பூரிப்படைந்தேன். அவ்வளவு காலமும் பிரிந்து, வாழ்விற் பல இன்ப துன்பங்களை அனுபவித்த அவருடன் எதைப் பேசுவது என்றே எனக்கு விளங்கவில்லை.

### 12. ஆனந்தன்

நீல நெடுங்கடலில் நீந்தும் வெள்ளிய வள்ளம்போலப் பிறைச் சந்திரன் கீழ்வானில் மிதக்கலானுன். ஆயிரமாயிரம் விண்மணிகள் வானவெளியில் நின்று மினுமினுத்தன. அலையற்ற ஆழிபோல அமைதியாகச் சாந்தமாக இருந்தது வானம்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 91, ஹோட்டன்பிளேஸ், கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[4565]



"நான் லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகிக்கிறேன்" என்று நிம்மி சொல்லுகிறார்.




சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 858-X34 TM




**அன்பான மருமக்களே!**

வணக்கம். இம்முறை ஏற்படுத்திய போட்டியில் மருமக்களில் அதிகமானோர் பங்குபற்றவில்லை. "மாமா, கொழும்புக் காட்சியைப் போய்ப் பாராமல் அதைப்பற்றி எப்படி எழுதமுடியும்" எனப் பலர் கடிதங்கள் எழுதியிருந்தனர். அப்படியிருந்தபோதிலும் காட்சியைப் பார்த்தவர்கள் கட்டுரைகள் அனுப்பியிருந்தனர். ஒருசிலர் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளைப் படித்துவிட்டு அப்படியே தாங்களும் எழுத முயன்றிருக்கின்றனர். இவற்றையெல்லாம் தவிர்த்த பின் மிகச்சில கட்டுரைகளே போட்டியிற் சேர்க்கப்பட்டன. பொதுவாகக் கூறுமிடத்து இம்முறை நல்ல கட்டுரைகள் கிடைக்கவில்லை. கீழ்ப்பகுதி மருமக்கள் வரைந்து அனுப்பிய அணிலின் சித்திரமும் உயர்வாகக் காணப்படவில்லை.

மருமக்களே! இலக்கியச் செல்வம் என்ற பகுதி இவ்வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது அனைவருக்கும் மகிழ்ச்சிதரும் விஷயமல்லவா?



## மருமக்கள் போட்டி - 10

**பரிசு பெற்றவர்கள்:**

கீழ்ப் பிரிவு
ச. லோகேஸ்வரன், 'சங்கர வாசா,' புத்தூர்.

மேற் பிரிவு
வி. கந்தவனம், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி.

இவர்களுக்குரிய பரிசுகள்
30-4-52-ல் அனுப்பிவைக்கப்படும்.

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்ததிகதி: ..............................

..............................
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

*இலக்கியச் செல்வம் 14*

# திருக்குறள் — அங்கவியல்

**கே. எஸ். கிருஷ்ணன்**

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பவையான அரசுக்குரிய ஆறங்கங்களை 32 அதிகாரங்களால் இவ்வியலில் திருவள்ளுவர் விளக்குகிறார்.

அமைச்சு என்ற அங்கத்தை 10 அதிகாரங்களால் வருணிக்கிறார். அமைச்சருக்கு அமைந்திருக்கவேண்டிய மதிநுட்பம், விடாமுயற்சி, நீதிநூலாராய்ச்சி, அடக்கமுடைமை, சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெய்வகை போன்ற நற்குண நற்செய்கைகளையும், வேற்றவைக்குத் தூதுவராகச் செல்லும் அமைச்சர் கடைப்பிடிக்க வேண்டியவொழுக்கம், அரசரைச் சேர்ந்தொழுகுமுறை, குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை முதலான உயரிய பண்புகளையும் இப் பத்ததிகாரங்களில் எடுத்துக் கூறுகிறார்.

நட்பென்ற அங்கத்தை உடன்பாடு எதிர்மறை என்ற இரண்டு முறைகளால் விவரிப்பதற்கு 16 அதிகாரங்கள் வகுத்திருக்கிறார். நட்பின் இலக்கணம் நட்பாராய்தல், பழைமை, தீநட்பு, கூடாநட்பு என்ற விஷயங்களை 5 அதிகாரங்களில் உடன்பாட்டு முறையால் விளக்குகிறார். தீநட்புக்கும் கூடாநட்புக்கும் காரணமான பேதைமை, புல்லறிவாண்மை யென்ற மயக்கத்தின் இரண்டமிசங்களையும் இரண்டதிகாரங்களில் ஆராய்கிறார். தீநட்பும் கூடாநட்பும் விளைவிக்கும் வெளிப்பகை, உட்பகை யென்ற இவற்றை 4 அதிகாரங்களால் வருணிக்கிறார். தீநட்பு, கூடாநட்பு இவைகளால் பெரியாரைப்பிழைத்தல், சூது, கள், பெண்வழிச்சேறல் முதலான கெட்ட பழக்கங்கள் உண்டாகக்கூடுமாதலால் இவைகளை நீக்கவேண்டுமென்று 5 அதிகாரங்களால் உபதேசிக்கிறார்.

இவ்வாறாக அமைச்சு நட்பு என்ற இரண்டு அங்கங்களை 26 அதிகாரங்களால் விளக்கி, மிகுந்த 6 அதிகாரங்களால் படை, குடி, கூழ், அரண் என்ற நான்கு அங்கங்களையும் வருணிக்கிறார். ஒரு அதிகாரத்தால் அரண் என்ற அங்கத்தையும், இரண்டு அதிகாரங்களால் படையையும், நாடு என்ற ஒரு அதிகாரத்தால் குடி என்ற அங்கத்தையும், பொருள் செயல் வகை, மருந்து என்னும் இரண்டு அதிகாரங்களால் கூழ் என்ற அங்கத்தையும் திருவள்ளுவர் விளக்கியிருக்கிறார்.

இந்தவியலின் ஈற்றதிகாரத்தில் மருந்தை விதந்தோதியிருப்பதற்குக் காரணம் உண்டு. ஆறங்கங்களும் சரியாக இருக்க வேண்டுமாயின் குடிகள் நோயற்ற வாழ்வை வாழவேண்டும். அவ்வித வாழ்வைப் பெறுவதற்கான வழி வகைகளை மருந்தெனு மதிகாரத்திற் கூறுகிறார்.

தேசசேவை, சமூகத்தொண்டு, பொருளாதாரத்துறை இவைகளில் நோக்குள்ள மாணவர் அனைவரும் அங்கவியலிலுள்ள 320 குறட்பாக்களையும் படித்து, அறிந்து ஒழுகுதல் அவர் வாழ்க்கையிற் மிகுந்த பலனைத்தரும்.

### கன்னுதிட்டி ஜனசமூக நிலையம்

எதிர்காலத்தில் இளைஞர்களால்தான் தமிழின் பெருமை மேம்பாடு அடையுமெனத் தாம் நம்புவதாகக் கன்னுதிட்டி ஜனசமூக நிலையத்தின் பேச்சுப் போட்டிச் சங்கத்தில் நடந்த 'உலகம் முன்னேறுகின்றதா அல்லது பின்னடைகின்றதா?' என்ற விவாதத்திற்குத் தலைமை வகித்த திரு. ஆர். வி. மன்மதராயன் எம். எம். வி, அவர்கள் கூறினார்.

### பாலர் ஞானோதய சங்கம்

**கட்டுவன், மயிலிட்டி தெற்கு-வர்த்தலைவிளான்**

**29-வது ஆண்டு விழா**

இவ்விழா 14, 15-4-52 திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய சங்க வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

14-4-52 மாலை 6 மணிக்குத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தீ. தீ. ஜெயரத்தினம் பி. ஏ. அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமாயது.

சங்க உப தலைவர் திரு. சி. கந்தவனம் அவர்கள் வரவேற்புக் கூறினர். காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் கனம் டி. எஸ். சேனநாயகா அவர்கள் மீது அனுதாபத் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த வருடத்தில் சங்கம் புரிந்த சேவைகளைப்பற்றிய திரட்டறிக்கையொன்று காரியதரிசி திரு. க. பொன்னம்பலம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. சுளிபுரம் அரசினர் மத்திய கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் கா. இ. நடராஜன் அவர்கள் 'தெய்வம் மணக்கும் செய்யுள்' என்பதுபற்றியும் வீமன்காமம் ஆங்கில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. இ. நமசிவாயம் பண்டிதரவர்கள் 'இலக்கிய இன்பம்' என்பது பற்றியும் சிறந்த சொற்பொழிவாற்றினர். வலி—வடக்குக் காரியாதிகாரி திரு. தீ. பாலச்சந்திரன் அவர்கள் 'கிராமாபிவிருத்தி வேலைகள்' பற்றியும் சங்க வளர்ச்சிபற்றியும் குறிப்புரை கூறினர். சினன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை மாணவிகளால் சிறந்த சங்கீதக் கச்சேரி நடாத்தப்பட்டது. தலைவரவர்களின் முடிவுரையோடும் திரு. த. சிவக்கொழுந்தர் அவர்களின் வந்தனோபசாரத்தோடும் கூட்டம் 10 மணிக்கு இனிது நிறைவெய்தியது. 15-4-52 பிற்பகல் 2 மணியளவில் சங்க உபதலைவர் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்களின் தலைமையில் சங்க உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர்.








உங்களுடைய குழந்தைகளுக்கும்கூட ஹார்லிக்ஸின் கூடுதலான போஷணை அவசியமானது

அடிக்கடி குழந்தைகளுக்கு அவர்கள் உட்கொள்ளும் ஆகாரத்திலிருந்து அவர்களுடைய தேகத்தை வளர்க்கவும், இழந்த சக்தியை மீண்டும் அளிக்கவும் வேண்டியதான போஷாக்குக் கிடைப்பதில்லை. ஹார்லிக்ஸ் குழந்தைகளுக்கு ஓர் விசேஷமான கூடுதல் உணவு. ஏனெனில் அது அவர்களுடைய தேகத்தை வளர்த்து வலிமையை உண்டுபண்ணும் போஷணைச் சத்துக்கள் நிறைந்திருக்கிறது. ஹார்லிக்ஸ் மிகவும் நல்லது. ஏனெனில் அது சுத்தமான பசும்பாலிலிருந்தும், கோதுமை, பக்குவப் படுத்தப்பட்ட பார்லி முதலியவைகளின் போஷாக்குச் சத்துக்களிலிருந்தும் தயாரிக்கப் படுகிறது.

**ஹார்லிக்ஸ்**

கூடுதல் போஷணையை அளிக்கிறது
ஏராளமான வலிமையை உண்டு பண்ணுகிறது




HLC. 3160

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

T'Phone No. 805

The
# EeLAKESARI

NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

| Vol. 22 | Chunnakam, Sunday, April 27, 1952 | No. 40 |
|---|---|---|

# உறவு மலர்ச்சி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் சோலையில் நானும் பத்மினியும் தனிமையில் இருந்தோம். இரவின் அமைதி போல எமது மனத்திலும் அமைதி நிலவியது. பெரும் புயலின்பின் நிலவும் அமைதி போல எமது மன அமைதியிலும் ஒரு தனிச்சாந்தம்—தனிக் குளிர்ச்சி—கலந்திருந்தது.

எனது மடியிற் சாய்ந்திருந்த அவள் என்னையே பார்த்தவாறு இருந்தாள். அதிலே ஏதும் சுகங்கண்டோ, ஏதோ, பார்வையை எடுக்க இயலாது பதைபதைத்துக் கொண்டிருந்தாள்.

எனது கரம் அவளது கருங் குழலைக் கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தது. பாலசந்திரனின் பசுங் கரங்களும் காரிருட் கன்னிகையின் கருங் குழலைக் கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தன.

எங்கிருந்தோ ஒரு நறுமணம் தென்றலிலே நீந்தி எம்மை வந்தடைந்தது.

இருவரும் மௌனமாக இருந்தோம். உதடுகள் அசைய மறுத்தன.

நான் அவளையே பார்த்துப் பார்த்துப் பழைய எண்ணங்களைப் புதுப்பித்துக்கொண்டேன். பழைய எண்ணங்கள் மனதில் அலைபுரண்டன. எனது வாழ்வின் புதுமைகளும் அதிசயங்களும் எனக்கே புதிர்களாக இருந்தன.

முன்பு விமலாவை மணந்ததும், அவளுடன் அதே போன்ற சோலையில் அன்பை வளர்த்ததும், 'அவளே நான்; நானே அவள்' என்று நினைத்ததும், இவைபோன்ற பலவும் என்மனதில் வட்டமிட்டன. அலை அலையாக எண்ணங்கள் நெஞ்சத்தில் எழுந்தன. எனது வாழ்வில் மறைந்த ஒவ்வொரு சம்பவத்திலும் புதுமையும் துடிதுடிப்பும் பொருந்தியிருந்தன.

"பத்மினி" என்றேன் நான். என் குரல் கம்மியது.

"......" அவளது கண்கள் என்னைநோக்கின. என்ன? என்று கேட்பதுபோன்ற ஒரு பார்வையை வீசினாள் அவள். அப்பார்வையிலேயே அன்பும் இன்பமும் தோய்ந்திருந்தன.

"......என்னை....என்னை... முழுமனதாக மன்னித்துவிட்டாயா?" என்றேன் உணர்ச்சியுடன்.

என் கண்கள் கலங்கின. இரு துளி கண்ணீர் என் கன்னங்களில் உருண்டு அவளது கன்னத்தில் விழுந்து கீழே ஓடி மறைந்தன.

"எதற்காக உங்களை நான் மன்னிக்கவேண்டும்?" என்று கொஞ்சலாகக் கேட்டாள் அவள்.

"எதற்காகவா?... சந்திரன் மீது ஆணையிட்டு, உன்னை... உன் காதலை ஏற்றுக்கொண்டேன், என்றுவிட்டு, பின்பு ..." என்றேன். மேலே என்னாற் பேச இயலவில்லை. உள்ளக் குமுறலை அடக்க இயலாது விம்மினேன். கண்களிலிருந்து நீர் ஊற்றெடுத்துப் பாய்ந்தது.

"......இன்று சத்தியத்தை நிறைவேற்றி விட்டீர்கள்!" என்றுகொண்டே எழுந்து, தனது சேலைத் தலைப்பால் என் கண்களை ஒற்றினாள்.

அதிலே எனது உள்ளம் ஒரு புத்துணர்ச்சி பெற்றது.

அவளை அப்படியே அணைத்தேன். அன்புக் கரங்களால் அவளது அகத்தையும் அணைத்தேன். பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைபோல என் அணைப்பிலே, இன்ப வெள்ளத்திலே அயர்ந்தாள் அவள்.

* * *

இருவரும் வீடு சென்றோம். எமது அறையில் இருள் குடிகொண்டிருந்தது. நான் அதனுட் புகுந்தேன். அவளும் என்னைப் பின்தொடர்ந்தாள். அங்கே இருந்த விளக்கிற்குத் திரியும் எண்ணெயும் இட்டுத் தீபமும் ஏற்றினாள்.

அறை முழுவதும் இருள் நீங்கி, இன்ப ஒளி மிளிருமாறு அவள் ஏற்றிய குளிர் விளக்குத் திகழ்ந்தது.

முற்றும்

## மலாயாவிற் பிறந்த இலங்கைத் தமிழர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரஜாவுரிமை பதிவுசெய்தல் இலகுவாகமுடியும்.

1. மலாயாவிற் பிறந்த அத்திகதி முதலியவற்றைக் குறிக்கும் அத்தாட்சிப் பத்திரம்.
2. தகப்பனுருடைய பிறப்புப் பத்திரம்.
3. பெற்றோரின் கலியாணப்பதிவுப் பத்திரம். இது கிடையாவிடின் கைம்பெண்கட்கு அளிக்கும் உபகாரச் சம்பள அத்தாட்சிப் பத்திரம்.
4. தாய் தந்தையரினது பெற்றோரின் பிறப்புப் பத்திரம் கேட்பதை முற்றாக நீக்க வேண்டும்.

எனவே அரசினர் சிறிதுங் காலந்தாழ்க்காது மலாயாவிற் பிறந்த இத் தமிழ் இளைஞர்களின் பிரஜாவுரிமையைப் பதிவுசெய்ய வசதிகள் அளிப்பது அவசியமாகும். இலங்கையின் செல்வத்தையும் வளத்தையும் பன்மடங்கு விருத்திசெய்த இத் தமிழ் மக்களுக்கு இலங்கை மக்களும் அரசினரும் எவ்வளவு நன்றி பாராட்ட வேண்டும். இவர்களது சலியாத உழைப்பும் முயற்சியும் இல்லாவிடின் யாழ்ப்பாணம் தற்போதைய உன்னத நிலையை அடையமாட்டாது. ஆகவே இந்த அவசிய விஷயம் விரைவிற் கைகூட இலங்கை மக்கள் யாவரும் அநுதுணையாகநின்று உதவி புரியவேண்டியது அவசியமாகின்றது. அரசினரும் வேண்டிய வேண்டிய திருத்தங்களை உடனே செய்ய வேண்டியவர்களாகின்றனர்.

## அடைவு நகை ஏல விற்பனை

பருத்தித்துறை தம்பளை வடலிப்பாதியிலிருக்கும் அடைவுபிடிக்கும் ஸ்ரீமதி நாகப்பர் வினாசித்தம்பி அவர்களிடம் 1949 ஆம் தை மீ 1ஆ முதல் 1950 ஆம் மார்கழி மீ 31ஆ வரையுள்ள மீளாத நகைகள் யாவும் 1952ஆம் வைகாசி மாதம் 12ஆ பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து என்னால் ஏலத்தில் விற்கப்படும்.

கு. வே. நாகலிங்கம்
வெந்தீஸ்மேஸ்தர்

புலோலி மேற்கு
பருத்தித்துறை [4581—ii]




S. 196-X54 TM

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப் பணம் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4566]

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1952-ம் ஆண்டு ஏப்ரல் மீ 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.